Sl. No. of Q.P. : 7554

E-15

| | | |
|---|---|---|
| Name of the Paper | : | Skills of Language Use and Social History of Tamil |
| Name of the Course | : | B.A. (PROG) I Year- Paper-I: Tamil-A |
| Semester/Annual | : | Annual Mode |
| Duration | : | 3 Hours |
| Maximum Marks | : | 100 |

1. கட்டுரையின் வகைகளை விளக்கி எழுதுக. (20)

(அல்லது)

நீவிர் சென்று வந்த பயணம் பற்றி ஒரு கட்டுரை வரைக.

2. கடிதத்தின் அமைப்பினை விளக்கி எழுதுக. (15)

(அல்லது)

உமது பகுதிக்கு பேருந்து சேவை வேண்டி அதன் ஆணையருக்கு விண்ணப்பக் கடிதம் ஒன்று எழுதுக.

3. பின்வரும் பத்தியைப் படித்து, தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு விடையளிக்க.(15)

எட்டாம் நூற்றாண்டில் மாணிக்கவாசகர் சிவபெருமானைப் பாடிய பாடல்கள் திருவாசகம் எனப்படும். திருக்கோவையார் என்னும் நூலும் அவர் பாடியதாகும். அதில் உள்ள நானூறு பாடல்களும் காதல்துறை சார்ந்தவை. மாணிக்கவாசகர் தன்னை நாயகியாகவும் சிவனை நாயகனாகவும் கொண்டு பாடியுள்ளார். திருவாசகத்தில் உள்ள அறுநூற்றைம்பது பாடல்கள் பக்திப் பாடல்களாகச் சிறப்புப் பெற்றவை. "திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்" என்று கூறுமளவிற்கு அதில் பக்திச் சுவை நனிசொட்ட இடம் பெற்றுள்ளது. தமிழ் நாட்டிற்கு வந்து தொண்ட செய்த ஜி.யு. போப் என்னும் ஆங்கிலேயரையும் இந்தப் பக்தி நூல் கவர்ந்தது. அதன் காரணமாக அந்நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். பாண்டிய அரசனிடம் அமைச்சராக இருந்த மாணிக்கவாசகர் சிவபக்தியில் நெஞ்சம் நெக்குருகிப் பாடிய அப்பாடல்கள் இன்னும் சைவர்களின் வீடுதோறும் வழிபாட்டின்போது பாடப்படுகின்றன.

கேள்விகள்

அ) மாணிக்கவாசகரால் எழுதப்பட்ட பக்திநூல்கள் யாவை?

ஆ) திருக்கோவையாரில் இடம் பெற்றுள்ள பாடல்கள் எத்தனை?

இ) திருவாசகம் எம்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது?

ஈ) மாணிக்கவாசகர் யாருடைய அவையில் அமைச்சராக இருந்தார்?

உ) சைவர்களின் இல்லங்களில் பாடப்பெறும் பக்திப் பாடல்கள் யாவை?

4. இணைச்சொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக. (5)

(அல்லது)

உவமைத்தொடர் என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

5. இரட்டைச்சொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக. (5)

(அல்லது)

பழமொழி என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

6. கலைச்சொல்லாக்கத்தின்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விதிமுறைகள் யாவை? (5)

(அல்லது)

கீழ்க்காணும் தொடர்களை வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

அ) ஈவு இரக்கம் ஆ) பல்லைக் காட்டுதல் இ) நெற்றிவேர்வை நிலத்தில் சிந்த

7. எவையேனும் இரு தலைப்புகளில் கட்டுரை எழுதுக. (12.5 X 2 = 25)

அ) இந்தியாவிற்கு வெளியே தமிழ்ச் செல்வாக்கு

ஆ) தமிழில் பிறமொழிச் சொற்கள்

இ) தமிழர் பண்பாடு

8. எவையேனும் இரண்டு பற்றி சிறுகுறிப்பு வரைக. (5 X 2 = 10)

அ) அவிரோதம்

ஆ) தமிழர்த் திருநாள்

இ) கோயில்